வ.மா.பொ.சே.ஆ.குழு சுற்றறிக்கை இல. **30/2026**

எனது இல. NP/07/10/01/237
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்,
யாழ்ப்பாணம்.
2026.09.21

பிரதம செயலாளர்,
ஆளுநரின் செயலாளர்,
அமைச்சின் செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வடக்கு மாகாணம்.

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழ் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் கீழான உயிரியல் மருத்துவ தொழில்நுட்பவியலாளர் தரம் III அல்லது பயிற்சித் தரம் ஆகிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2026

அமைச்சரவை அலுவலகத்தின் செயலாளர் அவர்களது CP/DEC/25 இலக்க 2025.07.16ம் திகதிய கடிதம் மூலம் வழங்கப்பட்டுள்ள 2025.07.07ம் திகதிய அமைச்சரைவைக் கூட்டத் தீர்மானத்தின் பிரகாரம், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரின் NP/04/01/Recruitment/2025 இலக்க 2025.08.04ம் திகதிய கடிதம், 2026.01.01ம் திகதி முதல் செயல்வலுப்பெறும் வகையில் 2026.07.20ம் திகதியில் வடக்கு மாகாண கௌரவ ஆளுநரால் அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கமைய, NP/04/01/BMT App/2026 இலக்க 2026.07.30ம் திகதிய கடிதம் மூலம் வடக்கு மாகாண சுகாதார அமைச்சால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை மற்றும் சம இலக்க 2026.08.11ம் திகதிய கடிதம் மூலம் வழங்கப்பட்ட தரவுகள் ஆகியவற்றுக்கமைய, வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழ் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் கீழான உயிரியல் மருத்துவ தொழில்நுட்பவியலாளர் பதவிக்கு அட்டவணை - **I** இல் காட்டப்பட்டுள்ள வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையானது, வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அவர்களால் 2026ம் ஆண்டு ஒக்ரோபர் மாதமளவில் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி **2026.10.09** ஆகும்.

- **அட்டவணை – I**

| இல | பதவிப் பெயர் | பதவி இல | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01. | உயிரியல் மருத்துவ தொழில்நுட்பவியலாளர் தரம் III | **a** | 03 |
| 02. | உயிரியல் மருத்துவ தொழில்நுட்பவியலாளர் பயிற்சித் தரம் (ஒரு வருடம்) | **b** | |

## 02. ஆட்சேர்ப்புக்கான சேவை நிபந்தனைகள் :

02.1 **(a)** 2026.01.01ம் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட **வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழ் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் கீழான உயிரியல் மருத்துவ தொழில்நுட்பவியலாளர்** பதவிக்குரிய ஆட்சேர்ப்புத் திட்டத்தில் விதந்துரைக்கப்பட்ட நிபந்தனைகள், தாபனவிதிக்கோவை ஏற்பாடுகள், நிதிப்பிரமாணங்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1817/30 ஆம் இலக்க **2013.07.03**ம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை மற்றும் இப்பதவியுடன் தொடர்புபட்டு, காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் விதிகள், கட்டளைகள் ஆகியவற்றிற்கு உட்பட்டு, தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் **அட்டவணை – I** இல் காட்டப்பட்டுள்ளவாறு உயிரியல் மருத்துவ தொழில்நுட்பவியலாளர் பதவியின் தரம் III இற்கு நியமிக்கப்படுவர்.

**(b)** இப்பரீட்சையில் சித்தி பெற்ற பரீட்சார்த்திகள் நியமனத் திகதியிலிருந்து ஓராண்டு காலம் பதில் கடமைக்கு உட்படுத்தப்பட்டு உயிரியல் மருத்துவ தொழில்நுட்பவியலாளர் தரம் III பதவியில் உறுதிப்படுத்தப்படுவர். இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு **உயிரியல் மருத்துவ தொழில்நுட்பவியலாளர்** பதவியின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று *(03)* வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.

*02.2* **(a) எனினும்,** உயிரியல் மருத்துவ தொழில்நுட்பவியலாளர் பதவியின் **தரம் III** இற்கு மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சை மூலம் நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தகுதி பெற்ற விண்ணப்பதாரிகள் போதுமானதாக இல்லாத பட்சத்தில் **எஞ்சிய வெற்றிடங்கள் மட்டும் பயிற்சித் தரத்தில்** தகைமை பெற்ற விண்ணப்பதாரிகளூடாக நிரப்பப்படும்.

**(b)** அவ்வாறான சந்தர்ப்பத்தில், போட்டிப் பரீட்சையின் மூலம் பயிற்சித் தரத்திற்குரிய (ஒரு வருடம்) நியமனத்திற்கு தேர்வு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் உயிரியல் மருத்துவ தொழில்நுட்பவியலாளர் பயிற்சித் தரத்திற்கு (ஒரு வருடம்) நியமிக்கப்படுவர்.

**(c)** இப்பயிலுனர்களிற்கென குறித்தொதுக்கப்பட்ட பயிற்சிக்கால முடிவின் பின்னர் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் அங்கீகரிக்கப்படும் நிறுவனத்தினால் நடாத்தப்படும், தகைமைகாண் பரீட்சை (எழுத்து மற்றும் செய்முறைப் பரீட்சை) ஒன்றுக்குத் தோற்றுதல் வேண்டும்.

**(d)** அவ்வாறு அப் பரீட்சையில் சித்திபெற்று, சித்திபெற்றதனை நிரூபிக்கும் தொடர்புடைய நிறுவனத்தினால் வழங்கப்படும் பெறுபேற்றினை சமர்ப்பித்ததும் இப் பதவியின் **தரம் III** இற்கான நியமனம் வழங்கப்படும்.

**(e)** அவ்வாறு மேலே பந்தி 2.2 (c) இல் குறிப்பிட்டவாறு பயிற்சியின் நிறைவில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறும் பயிலுனர்களுக்கு, அவர்களுடைய பயிற்சிக்காலத்தினை மேலும் **ஆறு** *(06)* மாதங்களுக்கு மேற்படாமல் நீடிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவதுடன் பயிற்சிக் காலத்தினுள் மீண்டும் நடைபெறும் பரீட்சையில் சித்திபெறாத, மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பயிலுனர்களின் இப் பயிற்சிக்காக வழங்கப்பட்ட நியமனம் இரத்துச் செய்யப்படுவதுடன், தாம் முன்னர் வகித்த பதவிக்கு மீள அனுப்பப்படுவர்.

*02.3* மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட பயிலுனர்கள், பயிற்சித் தரத்திற்கு நியமிப்புச் செய்யும்போது முன்னைய பதவியில் பெற்ற சம்பள அளவுத்திட்டத்தில் அமர்த்தப்படுவர். இருப்பினும் பயிற்சிக் காலத்தின் முடிவில் திணைக்களத்தால் நடாத்தப்படும் பரீட்சையில் அவர்கள் சித்தியடையும் வரை, இலங்கை தொழில்நுட்ப சேவையின் ஆட்சேர்ப்பு தரத்தின் ஆரம்ப சம்பள உயர்வுக்கு சமமான வருடாந்த படி அவர்களுக்கு வழங்கப்படும். இதற்கிடையில் இப் பரீட்சையில் சித்தியடைந்தவுடன் இந்த படி தொடர்ச்சியாக வழங்கப்படும்.

பயிற்சிக் காலத்தினை திருப்திகரமாக நிறைவுசெய்யுமிடத்து, தாபன விதிக்கோவையின் அத்தியாயம் VII இன் பிரிவு 04 இற்கமைய சம்பளம் மாற்றியமைக்கப்படும். *(07/2000* இலக்க *2000.03.02*ம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கையால் திருத்தப்பட்டது)

02.4 இச்சேவை இடமாற்றத்திற்குட்பட்ட சேவையாகும். இதனால் இந்நியமனம் பெறுபவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனைக்கும் கீழ்ப்படிதல் வேண்டும்.

*02.5* அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 18/2020 மற்றும் இது தொடர்பாக தொடர்ந்து வரும் சுற்றறிக்கைகள் என்பவற்றுக்கமையவும், நியமனத் திகதியிலிருந்து **மூன்று (03)** வருடங்கள் முடிவதற்கு முன்னர் குறித்துரைக்கப்பட்ட இரண்டாவது அரச கரும மொழியில் தேர்ச்சி பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

*02.6* மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலம் நியமிக்கப்படவுள்ள ஆட்களின் மொத்த எண்ணிக்கை **அட்டவணை - I** இல் காட்டப்பட்டவாறு **மூன்று (03)** ஆகும். நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலுக்கு வரும் திகதி என்பன நியமன அதிகாரியினால் வரையறுக்கப்படும். எனினும் அறிவிக்கப்பட்ட இவ் வெற்றிடங்கள் தொடர்பில் பகுதியளவு வெற்றிடங்கள் அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கான அதிகாரத்தினை நியமன அதிகாரி கொண்டுள்ளார்.

## 03. சம்பள அளவுத்திட்டம் :

03.1 **இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் உயிரியல் மருத்துவ தொழில்நுட்பவியலாளர் தரம் III பதவிக்கானது :-**

அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை **10/2025** க்கு அமைவான, சம்பளத் தொகுதி **MN 3 - 2025** க்கு ஏற்ப **இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் உயிரியல் மருத்துவ தொழில்நுட்பவியலாளர்** பதவி தரம் - III ற்கான திரட்டிய சம்பள அளவுத்திட்டமானது ரூபா. **52,250 - 10 x 800 - 11 x 1,190 - 10 x 1,320 - 10 x 1,350 - 100,040/-** ஆகும். (இவ் அளவுத்திட்டத்தின் நான்காவது படிநிலையை அடைய முன் முதலாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்திபெறல் வேண்டும்) எவ்வாறாயினும் மேற்படி சுற்றறிக்கையின் **அட்டவணை - III** இல் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக விதித்துரைக்கப்பட்ட சம்பளம் இப்பதவியின் பொருட்டு வழங்கப்படும்.

03.2 **இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் உயிரியல் மருத்துவ தொழில்நுட்பவியலாளர் பயிற்சித் தரம் பதவிக்கானது :-**

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழ் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் கீழான உயிரியல் மருத்துவ தொழில்நுட்பவியலாளர் பதவிக்குரிய ஆட்சேர்ப்புத் திட்டத்தில் விதித்துரைக்கப்பட்ட *2025.03.25*ம் திகதிய *10/2025*ம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய, **அட்டவணை - VI** இல் விதித்துரைக்கப்பட்ட வகையில் பயிற்சித்தர கொடுப்பனவாக 2026ம் ஆண்டுக்குரிய மாதாந்தப் படி ரூபா **43,274/-** வழங்கப்படும்.

## 04. கல்வித் தகைமைகள், தொழில்சார் மற்றும் ஏனைய தகைமைகள் :

### 04.1 உயிரியல் மருத்துவ தொழில்நுட்பவியலாளர் தரம் III

#### *04.1.1* கல்வித் தகைமை :

க.பொ.த (சா/த) பரீட்சையில் **இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில்** தமிழ் / சிங்கள மொழி, கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் **திறமைச் சித்திகளுடன்** (Credit Pass) **ஆறு** *(06)* பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

#### *04.1.2* தொழில்சார் தகைமை :

கீழே குறிப்பிடப்பட்டுள்ள **ஒரு தொழிற் தகைமையுடன்** தொடர்புடைய துறையில் ஐந்து *(05)* வருட அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து, பதவியுடன் தொடர்புடைய துறையில் (உயிர் மருத்துவம் - Bio-Medical / மின்னியல் - Electrical / இலத்திரனியல் - Electronics) தேசிய தொழில்நுட்ப டிப்ளோமாவைப் (National Diploma in Technology) பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(ii) மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியிலிருந்து (Technical College), நிறுவனம் ஒன்றிலிருந்து, பதவியுடன் தொடர்புடைய துறையில் (உயிர் மருத்துவம் - Bio-Medical / மின்னியல் - Electrical / இலத்திரனியல் - Electronics) தேசிய தொழிற் தகைமை மட்டம் - 6 (NVQ Level 6) சான்றிதழினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(iii) உயர் கல்வி அமைச்சு மற்றும் பிற தொடர்புடைய சான்றளிக்கும் அமைப்புக்கள் போன்ற நிறுவனங்களின் கருத்துக்களின் அவதானிப்பின் அடிப்படையில், மேலே *04.1.2* (ii) இல் குறிப்பிடப்பட்ட தகைமைகளுக்கு சகல வகையிலும் சமமானவையென மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் தொழில்நுட்பத் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

*04.1.3* அனுபவம் :

வடக்கு மாகாண பொதுச்சேவையில், ஆரம்பமட்டம் (Primary level) / முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பமல்லாத தொகுதி *2* (Management Assistant Non-Tec Sec 2) / முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பமல்லாத தொகுதி *1* பல்துறைப் பிரிவு சேவை வகுதியின் (Management Assistant Non-Tec Sec 1 multi duty service category) ஒரு நிரந்தரப் பதவியில் **ஐந்து *(05)* ஆண்டுகள்** முனைப்பானதும் மற்றும் திருப்திகரமானதுமான சேவை அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

**04.2 உயிரியல் மருத்துவ தொழில்நுட்பவியலாளர் பயிற்சித்தரம் (ஒரு வருடம்)**

**a) கல்வித் தகைமைகள் :**

க.பொ.த (சா/த) பரீட்சையில் **இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில்** தமிழ் / சிங்கள மொழி, கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் **திறமைச் சித்திகளுடன்** (Credit Pass) **ஆறு *(06)*** பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**b) தொழில்சார் தகைமைகள் :**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள **ஒரு தொழிற் தகைமையுடன்** தொடர்புடைய துறையில் **மூன்று *(03)* வருட** அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(i) தொழில்நுட்பக் கல்லூரி (Technical College) / மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து, பதவியுடன் தொடர்புடைய துறையில் (உயிர் மருத்துவம் - Bio-Medical / மின்னியல் - Electrical / இலத்திரனியல் - Electronics) தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ் (National Certificate in Technology) / தேசிய தொழிற் தகைமை மட்டம் - 4 (NVQ Level 4) சான்றிதழினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

(ii) உயர் கல்வி அமைச்சு மற்றும் பிற தொடர்புடைய சான்றளிக்கும் அமைப்புக்கள் போன்ற நிறுவனங்களின் கருத்துக்களின் அவதானிப்பின் அடிப்படையில், மேலே *04.2* b) (i) இல் குறிப்பிடப்பட்ட தகைமைகளுக்கு சகல வகையிலும் சமமானவையென மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் தொழில்நுட்பத் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**c) சேவை அனுபவம் :**

வடக்கு மாகாண பொதுச்சேவையில், ஆரம்பமட்டம் (Primary level) / முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பமல்லாத தொகுதி *2* (Management Assistant Non-Tec Sec 2) / முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பமல்லாத தொகுதி *1* பல்துறைப் பிரிவு சேவை வகுதியின் (Management Assistant Non-Tec Sec 1 multi duty service category) ஒரு நிரந்தரப் பதவியில் **ஐந்து *(05)* ஆண்டுகள்** முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவை அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

குறிப்பு :

I. தரம் III இற்கு நேரடியாக ஆட்சேர்ப்பு செய்தல் மற்றும் பயிற்சித் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்தல் என இரண்டு வழிமுறைகளில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும். எனினும் தரம் III இற்கே முதலில் ஆட்சேர்ப்பு செய்யப்படல் வேண்டும்.

II. தரம் III இற்கு நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தகுதி பெற்ற விண்ணப்பதாரிகள் போதுமானதாக இல்லாத பட்சத்தில் எஞ்சிய வெற்றிடங்கள் மட்டும் ஆட்சேர்ப்புக்கான தகுதிகளைப் பூர்த்தி செய்யும் பயிற்சித் தர விண்ணப்பதாரர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

04.3 **உடற் தகுதி**

விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்கும், பதவியிலுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்கும் வேண்டிய சிறந்த உடல், உள ஆரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

04.4 **ஏனையவை :**

i. நிரந்தர நியமனத்தில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

ii. விண்ணப்பதாரர் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர், பொதுச் சேவையின் நிரந்தர நியமனத்தில் ஆகக்குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ளவராக இருத்தல் வேண்டுமென்பதுடன், அதுபற்றி சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

iii. விண்ணப்பங்கள் கோருவதற்கான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில், அலுவலர்கள் சகல தகைமைகளையும் முழுமையாகப் பூர்த்தி செய்திருந்தால் மட்டுமே, அவர் ஆட்சேர்ப்புக்கான எழுத்துப் பரீட்சையில் தோற்றுவதற்கான தகுதிகளைப் பெற்றவராக கருதப்படுவார்.

## 05. ஆட்சேர்ப்பு முறை :

05.1 இவ்விண்ணப்ப முடிவுத்திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கோரப்பட்டுள்ள **சகல தகைமைகளையும்** விண்ணப்பதாரி கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன். பெறுபேறுகளை எதிர்பார்த்துச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் அனைத்தும் முன்னறிவித்தல் எவையுமின்றி நிராகரிக்கப்படும்.

05.2 எழுத்துப் பரீட்சை மூலம் திறமை அடிப்படையிலும், ஆட்சேர்ப்பு நேரத்தில் வலுவிலுள்ள அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகள், ஆட்சேர்ப்புத் திட்டம், தேசிய மற்றும் மாகாண கொள்கைகள் என்பவற்றிக்கு அமைவாகவும் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும். இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் பொது நேர்முகப் பரீட்சையின்போது பரிசீலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரியவந்தால் இப்பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும். பொது நேர்முகப்பரீட்சையின் போது இவ்வறிவித்தலில் கோரப்பட்ட சகல தகைமைகளும், ஆவணங்களும் பரிசீலிக்கப்படும். இதன் போது புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

05.3 மேற்படி தகைமையடைந்துள்ள விண்ணப்பதாரிகளிலிருந்து, எழுத்துப்பரீட்சையில் தகைமைபெறும் பரீட்சார்த்திகள் பெற்ற மொத்தப் புள்ளிகளின் உயர்வரிசை ஒழுங்கில் பொது நேர்முகத் தேர்விற்கு தெரிவு செய்யப்படுவர்.

## 06. பரீட்சைக் கட்டணம் :

விண்ணப்பதாரி, பரீட்சைக் கட்டணம் **ரூபா. 500/-** ஐ வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள எந்தவொரு தபால் அலுவலகமொன்றிலும் காசுக்கட்டளையாக **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்"** என்ற பெயருக்கு **யாழ்ப்பாணத் தபால் அலுவலகத்தில்** மாற்றக் கூடியவாறு செலுத்தி, அதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

## 07. விண்ணப்பிக்கும் முறை :

07.1 இவ்வறிவித்தலுடன் வெளியிடப்படும் விண்ணப்பப் படிவத்தினை www.np.gov.lk என்ற வடக்கு மாகாண சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்கு சென்று தரவிறக்கம் செய்து அதனை பூர்த்தி செய்து, **விண்ணப்ப முடிவுத் திகதி அல்லது அதற்கு முன்னர்** கிடைக்கக் கூடியவாறு, **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல. 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

07.2 விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"NP/07/10/01/237"** எனக் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னராக கிடைக்கின்ற விண்ணப்பங்களும், உரிய தகவல்களைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

07.3 விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளல் பயனுள்ளதாகும். விண்ணப்பத்தின் புகைப்படப்பிரதி மற்றும் முன்னோடிப்பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பரீட்சைக்கான அனுமதி அட்டை மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் அவர்களினால் அனுப்பி வைக்கப்படும். **பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படலானது விண்ணப்பதாரி சகல தகைமைகளையும் கொண்டுள்ளார் எனக் கருதப்படலாகாது.**

07.4 பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளினது விண்ணப்பப் படிவங்கள் கிடைத்தமை தொடர்பில் அறிவித்தல் எவையும் வழங்கப்படமாட்டாது. அத்துடன் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் கோரப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்திராத விண்ணப்பங்கள் முன்னறிவித்தல் ஏதுமின்றி நிராகரிக்கப்படலாம்.

07.5 விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் பரீட்சைத் திகதிக்கு குறைந்த பட்சம் 05 நாட்களுக்கு முன்னராவது அனுமதி அட்டை கிடைக்காவிடின், அனுமதி அட்டை கிடைக்காமைபற்றி, பின்வரும் விடயங்கள் உள்ளடங்கிய கோரிக்கைக் கடிதம் மூலம் **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல. 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு அறிவிக்க வேண்டும். (தொலைபேசி இல: 021 221 9939 / தொலைநகல் இல: 021 221 9940 / மின்னஞ்சல்: **exampscnp@gmail.com**)

- பரீட்சையின் பெயர்.
- விண்ணப்பதாரியின் முழுப்பெயர்.
- தேசிய அடையாள அட்டை இலக்கம்.
- விண்ணப்பதாரியின் அஞ்சல் முகவரி.
- விண்ணப்பதாரியின் மின்னஞ்சல் முகவரி.
- விண்ணப்பப் படிவத்தின் பிரதி.
- விண்ணப்பம் தபாலில் சேர்க்கப்பட்ட அஞ்சல் அலுவலகம், பதிவு இலக்கம், மற்றும் திகதி.
- பரீட்சைக்கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் சான்றுப்படுத்திய நிழற்படப்பிரதி.

## 08. ஆள் அடையாளத்தை நிரூபித்தல் :

08.1 பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை
(ii) செல்லுபடியான இலங்கை கடவுச்சீட்டு.
(iii) செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றை பரீட்சைக்கு தோற்றும்போது சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்தியொருவரின் பரீட்சார்த்தி உரிமை **"செயலாளர் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்"** அவர்களின் தற்றுணிவின்படி இரத்துச் செய்யப்படலாம். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

08.2 மேலும், பரீட்சார்த்திகள் அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடியவாறு முகம் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் கருவிகளை அணியவில்லையென்பதை உறுதிப்படுத்துவதற்காக இரு காதுகளையும் மறைக்காமல் பரீட்சை மண்டபத்தில் நுழைதல் வேண்டும். மேலும் அவ்வாறு உறுதிப்படுத்துவதை நிராகரிக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்த நேரத்திலிருந்து பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரையில் விண்ணப்பதாரியை அடையாளம் காணக்கூடிய விதத்தில் முகத்தையும் இரு காதுகளையும் மறைக்காமல் இருத்தல் வேண்டும்.

## 09. பொய்யான தகவல்களுக்கான தண்டனை :

விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யும்போது மிகக்கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின்படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின்போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது தகைமையற்றவர் எனத்

தெரியவருமாயின், அவரது பரீட்சார்த்தியுரிமை அச்சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்யப்படும். விண்ணப்பதாரி சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதெனத் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

## 10. கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்வது கட்டாயமானதாகும். விண்ணப்பதாரி தமது நிறுவனத் தலைவர் அல்லது அவர் சார்பில் கையொப்பமிட அதிகாரம் பெற்றவர் மூலமாக உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

## 11. பரீட்சைத் திட்டம் :

இவ் எழுத்துப் பரீட்சையானது கீழ்க் குறிப்பிட்டவாறான **இரண்டு (02)** வினாத்தாள்களைக் கொண்டிருக்கும் என்பதுடன். இப்பரீட்சை தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழி மூலங்களில் நடாத்தப்படும். விண்ணப்பித்த மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்பதுடன் இவ் எழுத்துப் பரீட்சையில் தோற்றி சித்திபெறத் தவறிய எந்தவொரு பரீட்சார்த்திக்கும் மீள்திருத்தத்திற்கு விண்ணப்பிப்பதற்கான ஏற்பாடுகள் எதுவுமில்லை.

| இல | வினாத்தாள் | வினாத்தாள் உள்ளடக்கம் | காலம் | மொத்தப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01. | நுண்ணறிவுப் பரீட்சை (Intelligence Test) | இவ்வினாத்தாளானது, விண்ணப்பதாரியின் பகுத்தறியும் திறன், முடிவெடுக்கும் ஆற்றல் மற்றும் பகுப்பாய்வு செய்யும்திறன் ஆகியவற்றினை மதிப்பீடு செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்ட வினாக்களைக் கொண்டிருக்கும்.<br>This paper consists of questions designed to assess the candidate's capacity for critical reasoning decision making and analytical power. | 01 மணித்தியாலம் | 100 |
| 02. | விடயத்துடன் தொடர்புடைய தொழில்நுட்ப பரீட்சை (Subject related Technological Test) | உயிரியல் மருத்துவ உபகரணங்கள் பற்றிய அறிவு (Knowledge on Bio Medical equipment), மின் (Electric) / மின்னணுச் சுற்றுக்கள் (Electronic Circuits), மின்சார (Electrical) / மின்னணு ஒழுங்குமுறைகள் (Electronic Regulations), தாவரங்கள் பற்றிய அறிவு (Knowledge of plants). | 03 மணித்தியாலங்கள் | 100 |

குறிப்பு :-

இப்பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சையாக இருப்பதால் பொது நேர்முகத் தேர்விற்கு தகைமை பெறுவதற்காக ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் **குறைந்தபட்சம் நாற்பது வீதத்தை (40%)** பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்ள வேண்டும். பொது நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரிகள் இப் போட்டிப் பரீட்சையில் பெற்ற மொத்தப் புள்ளிகளின் உயர் வரிசை ஒழுங்கு (Merit Order) கருத்தில் கொள்ளப்படும்.

## 12. பரீட்சைப் பெறுபேறுகள் :

பரீட்சார்த்திகளுக்கான முழுமைப்படுத்தப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகள் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் அவர்களால் www.np.gov.lk என்ற வடக்கு மாகாண சபை இணையத்தளம் மூலம் வெளியிடப்படும் என்பதோடு, தமது தனிப்பட்ட பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழையும் **www.np.gov.lk → Exams & Recruitments → Results** எனும் தொடர்பின் ஊடாக பார்வையிட்டு தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

**கவனிக்கவும் :-**

(i) இப்பரீட்சை சுற்றறிக்கை மூலம் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும், வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும்.

(ii) இப் பரீட்சையை நடாத்துதல் அல்லது இரத்து செய்தல் தொடர்பான அதிகாரம் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு உண்டு.

(iii) இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஏதேனும் தெளிவுபடுத்தல்கள் வேண்டுமென எதிர்பார்க்குமிடத்து, வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் பரீட்சைப் பிரிவின் 021 221 9939 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(iv) இவ் அறிவித்தலில் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில், தமிழ் மொழி உரையே மேலோங்கும்.

(v) இப் பரீட்சை தொடர்பான அறிவித்தலினை **www.np.gov.lk → Exams and Recruitments → Advertisement → 2026** என்ற வடக்கு மாகாண இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

(vi) இச்சுற்றறிக்கை பற்றி தங்களது அமைச்சு/திணைக்களம்/அலுவலகங்களின் கீழ் கடமையாற்றும் தகைமையுள்ள தொடர்புடைய சகல உத்தியோகத்தர்களின் கவனத்திற்கும் கொண்டு வரவும்.

ஆழ்வாப்பிள்ளை சிறி,
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
*2026.09.21*

ஆழ்வாப்பிள்ளை சிறி
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடக்கு மாகாணம்